

திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி கழக செயலாளர் பூக்கடை கணேசன் அவர்களின் தாயார் சாந்தா அம்மாள் அவர்களின் மறைவிற்கு முன்னாள் அமைச்சர் கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்களும் திருமதி.விசாலாட்சி பொன்முடி அவர்களும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்திற்கு ஆறுதல் கூறினர் ஒன்றிய செயலாளர்கள் PVR சு.விசுவநாதன், கை.ரா.சடகோபன், பொதுக்குழு உறுப்பின் பக்தவச்சலு, ஒன்றிய குழு தலைவர் கு.ஓம்சிவசக்திவேல், பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 22ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அவரது திருவுருவப் படத்திற்கு சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், ஆராஞ்சி. ஆறுமுகம், குட்டி க.புகழேந்தி, டி.எம்.கதிரவன், மோட்டூர் பாலு, இர.செல்வராஜ், து.சக்கரவர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

### தமிழ் தொண்டினை கௌரவிக்கும் விதமாக

# கவிஞர் ஈரோடு தமிழன்பனுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**ஈரோடு, நவ. 24-**

**கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

கவிஞர் ஈரோடு தமிழன்பன் என்கிற திரு. ந. செகதீசன் அவர்கள் உடல்நலக்குறைவின் காரணமாக இயற்கை எய்தியதையடுத்து அன்னாரின் உடலுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று முன்தினம் (22.11.2025) நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

மேலும், இறுதிக்காலம் வரையிலும் பல வகைமைகளிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய, நீண்ட நெடிய பெருவாழ்வுக்குச் சொந்தக்காரரான கவிஞர் ஈரோடு தமிழன்பனை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், தமிழன்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் முதலமைச்சர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களின் தமிழ் தொண்டினை கௌரவிக்கும் விதமாக காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டு அன்னாரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், வைப்பார் ஊராட்சி கலைஞானபுரம் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.17.10 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டுவதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, அன்புராஜன், இமானுவேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திண்டிவனத்தில் புதிய பேருந்து சேவை தொடக்கம்!

*திண்டிவனம் நவ 24-*

*விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் இருந்து ஒலக்கூர் ஒன்றியம் அம்மனம்பாக்கம் வழியாக ஏவலூர் ஊராட்சிக்குநகரப் பேருந்து சேவையும்,இதே போல் திண்டிவனத்தில் இருந்துமேல்மருவத்தூருக்கு பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், பொதுமக்கள் செல்வதற்காக புறநகர் பேருந்து சேவை இயக்க வேண்டுமென இப்பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.*

*இக்கோரிக்கையை ஏற்று புதிய பேருந்து சேவை தொடக்க விழா நிகழ்ச்சி திண்டிவனம் மேம்பாலம் அருகில் நடைபெற்றது.*

*திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்,ஒலக்கூர் ஒன்றிய சேர்மன் சொக்கலிங்கம், துணை சேர்மன் ராஜா ராமன் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். திண்டிவனம் பணிமனை மேலாளர் சிவகுமார் அனைவரையும் வரவேற்றார்.*

*நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு திண்டிவனத்தில் இருந்து மேல்மருவத்தூருக்கும், ஒலக்கூர் ஒன்றியம் ஏவலூர் ஊராட்சிக்கு புதிய பேருந்து சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.*

*நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,செயற்குழு உறுப்பினர் சீனிராஜ், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் டி. கே.பி. ரமேஷ் ,பாபு, பணிமனைகட்டுப்பட்டாளர் ராஜேந்திரன்,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், முன்னாள் நகர செயலாளர் கபிலன், கவுன்சிலர் ரேணுகா, நிர்வாகிகள் கௌதமன், சின்னதுரை, டாக்டர் சூர்யா பிரகாஷ் ,வி. எஸ். முருகன்,தொமுச நிர்வாகிகள் ராஜேந்திரன்,சரவணன், கங்காதரன், சங்கர், முருகன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

# புதுச்சேரியில் 4ம் கட்ட தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## அமைப்பாளர் இரா.சிவா முன்னிலையில் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி,நவ23–

தி.மு.கழகத் தலைவர், தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி அவர்கள் ஒன்றிய பாரதிய ஜனதா அரசின் பாசிச ஆதிக்கத்திலிருந்தும், இதற்கு துணை நிற்கும் புதுச்சேரி பா.ஜ.க கூட்டணி அரசிடமிருந்தும் மாநிலத்தை மீட்டு, புதுச்சேரியின் மண்–மொழி–மானம் காக்க, தி.மு.கழகத்தின் சார்பில் ”உடன்பிறப்பே வா பரப்புரையை முன்னெடுக்க ஆணையிட்டதின்பேரில், புதுச்சேரி, மாநிலத்தில் உள்ள 30 சட்டமன்ற தொகுதிகளில் 17 தொகுதிகளில் திமுக உறுப்பினர் சேர்க்கை மூன்று கட்டமாக தொடங்கப்பட்டுள்ளது.

நான்காம் கட்டமாக நேற்று காலை 09.00 மணியளவில் மண்ணாடிப்பட்டு தொகுதிக்கு உட்பட்ட திருக்கனூர் கடைவீதியில் திமுக உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டது.

மாநில அமைப்பாளர் இரா. சிவா முன்னிலையில் நடைபெற்ற முகாமில், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., அவர்கள் கலந்து கொண்டு, வீடு, வீடாக சென்று திமுக உறுப்பினர் படிவம் கொடுத்து உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து திருபுவனைத் தொகுதி கலிதீர்த்தால்குப்பம் கிராமத்திலும், நெட்டப்பாக்கம் தொகுதி நெட்டப்பாக்கத்திலும், மங்கலம் தொகுதி உறுவையாறு கிராமத்திலும் உறுப்பினர் சேர்க்கை தொடங்கி வைக்கப் பட்டது.

முகாமிற்கு அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி எம்.எல்.ஏ.,, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமிற்கான ஏற்பாடுகளை மண்ணாடிப்பட்டு தொகுதியில் மாநில துணை அமைப்பாளர் ஏ.கே.குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.எஸ். செந்தில்குமார், டி. செந்தில்வேலன், தொகுதி செயலாளர் ம. கலைவாணன், திருபுவனைத் தொகுதியில் தொகுதி செயலாளர் செல்வ. பார்த்திபன், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ. முகிலன், நெட்டப்பாக்கத்தில் தொகுதி செயலாளர் சக்திவேல், ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர் தேவேந்திரன், அவைத்தலைவர் பூபதி, மங்கலம் தொகுதியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சண். குமரவேல் ஆகியோர் செய்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ. மூர்த்தி, நந்தா. சரவணன், மாநில துணை அமைப்பாளர் அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப. செல்வநாதன், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ. வேலவன், வீ. சண்முகம், ஜெ. வேலன், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், கே.பி. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், நா. கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தட்டாஞ்சாவடி தொகுதி பொறுப்பாளர் டாக்டர் நித்திஷ், இந்திரா நகர் தொகுதி பொறுப்பாளர் பசுபிக் சங்கர், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், எம்.ஆர். திராவிட மணி, வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல். மணிகண்டன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ. மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், க. ராஜாராமன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், செ. ராதாகிருஷ்ணன், சி. சத்தியவேலு, அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், தொமுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ. குலசேகரன், வர்த்தகர் அணி சு. ரமணன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, மீனவர் அணி ந. கோதண்டபாணி, ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், விவசாய தொழிலாளர் அணி ப. தவமுருகன், தொழிலாளர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், பொறியாளர் அணி ஆ. அருண்குமார், நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அ. முகம்மது ஹாலிது, மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், சுற்றுச்சூழல் அணி த. முகிலன், அயலக அணி அ. ஷாஜகான், மகளிர் தொண்டர் அணி சுமதி மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்டம் மத்திய தொகுதிக்கு உட்பட்ட ஆரப்பாளையம் 1ம் பகுதி சேர்ந்த ஆனந்த மெமோரியல் பள்ளியில் 107, 108, 109, பாகத்தில் S I R வாக்கு சேகரிக்கும் பணி 58வட்ட கழக செயலாளர் சீனிரமேஷ் மற்றும் 57வது வட்ட செயலாளர் ஆட்டோ சுரேஷ் மற்றும் 57அ பொறுப்பாளர் துரை மணி ஆகியோர் தலைமையில் ஆரப்பாளையம் 1ம் பகுதி கழக செயலாளர் எஸ்.எஸ். மாறன் முன்னிலையில் மாநில கழக பொது குழு உறுப்பினர் வைகை M. பரமன் துவங்கி வைத்தார். உடன் BLA 2 நிர்வாகிகள் பாண்டி, வெள்ளி மூர்த்தி, கரோலினா தேவி, மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் ராம் பிரசாத், T.பிரகாஷ், முத்துக்குமார், ரவிசங்கர், சாகுல் , பாலு, தீபக், மற்றும் R கார்த்திகேயன், அஜித்குமார் , பூவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. குமரேசன்

**நவம்பர் 24 (2006)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, ஆர்.கே.நகர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.**

**17வது வட்டக் கழகச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் – பகுதி செயலாளராகவும், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**வண்ணாரப்பேட்டை பால் நுகர்கோவர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், நாம்கோ இயக்குநராகவும் பதவி வகித்தவர்.**

**1962 – விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை தர்மலிங்கம்

**நவம்பர் 24 (1986)**



**மாவட்டச் செயலாளராகவும், திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும், அன்றைய வடஆற்காடு மாவட்டத்தின் தூண்களில் ஒருவராகவும் விளங்கினார்.**

**1957ஆம் ஆண்டில் தி.மு.க. முதல்முறையாக பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டபோது கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது**

**அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் மிக நெருங்கிப் பழகியவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**